ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2203/33 - 2020 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.11.26
*2203/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

**அறிவித்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையின் கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் பின்வரும் அமைச்சுக்கள் தமது பொறுப்பில் இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

1. பாதுகாப்பு அமைச்சு
2. தொழில்நுட்ப அமைச்சு

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 26.


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அறிவித்தல்**

ச.அ.இல.: பிஎஸ்/ சிஎஸ்ஏ/ 00/ 1/ 13/ 12

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 47(2)(ஆ) ஆம் உறுப்புரையின்கீழ், புதிய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளைப் பொறுப்பேற்பதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமக்குரிய இராஜாங்க அமைச்சர் பதவிகளிலிருந்து 2020, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பதவி விலகியுள்ளார்கள் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | பதவி |
|---|---|
| மாண்புமிகு சமல் ராஜபக்ஷ, பா.உ. அவர்கள் | உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் |
| மாண்புமிகு சரத் வீரசேகர, பா.உ. அவர்கள் | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 26.

---

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2020 இன் இல. 907/ 1

ச.அ.இல.: பிஎஸ்/ சிஎஸ்ஏ/ 00/1/ 6/ 2

அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (1) (ஆ) ஆம் உறுப்புரையின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு சரத் வீரசேகர அவர்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக 2020, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு நியமித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 26.

---

2020 இன் இல. 907/ 2

ச.அ.இல.: பிஎஸ்/ சிஎஸ்ஏ/ 00/ 1/ 6/ 2

அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45 (1) (அ) ஆம் உறுப்புரையின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சமல் ராஜபக்ஷ அவர்களை, அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக 2020, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு நியமித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 26.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.